# Thiruppugazh Selection - 01

விநாயகர் துதி - நாட்டை - ஆதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
**மத்தள வயிறனை உத்தமி புதல்வனை**
**மட்டவிழ் மலர்கொடு பணிவேனே**

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

பதம் பிரித்தல்

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல் பொரி
கப்பிய கரி முகன் - அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் என வினை - கடிது ஏகும்

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மல் பொரு திரள் புய - மத யானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டு அவிழ் மலர் கொடு - பணிவேனே

முத்தமிழ் அடைவினை முற்படு கிரி தனில்
முற்பட எழுதிய - முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம்
அச்சு அது பொடி செய்த - அதிதீரா

அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை - இபம் ஆகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம் அருள் - பெருமாளே.

---

முருகன் துதி - ஹம்சானந்தி

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியைம ணம்புணர வந்தமுக மொன்றே

பதம் பிரித்தல்

ஏறுமயில் ஏறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞான மொழி பேசும் முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு அசுரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே

| | |
|---|---|
| ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்<br>ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே. | ஆறு முகம் ஆன பொருள் நீ அருளல் வேண்டும்<br>ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே. |
| கௌளை - திஸ்ரத்ரிபுடை / மிஸ்ரசாபு<br>ஷண்முகப்ரியா | பதம் பிரித்தல் |
| தத்தத்தன தத்தத் தனதன<br>தத்தத்தன தத்தத் தனதன<br>தத்தத்தன தத்தத் தனதன தனதான | |
| (அகர வரிசையில் 1171 எண்ணுள்ள இந்தப் பாடல், மரபை ஒட்டி, முதலில் வைக்கப்பட்டுள்ளது) | |
| முத்தைத்தரு பத்தித் திருநகை<br>அத்திக்கிறை சத்திச் சரவண<br>முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும் | முத்தை தரு பத்தி திரு நகை<br>அத்திக்கு இறை சத்தி சரவண<br>முத்திக்கு ஒரு வித்து குருபர - என ஓதும் |
| முக்கட்பர மற்குச் சுருதியின்<br>முற்பட்டது கற்பித் திருவரும்<br>முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப் | முக்கண் பரமற்கு சுருதியின்<br>முற்பட்டது கற்பித்து இருவரும்<br>முப்பத்து மூ வர்க்கத்து அமரரும் - அடி பேண |
| பத்துத்தலை தத்தக் கணைதொடு<br>ஒற்றைக் கிரிமத்தைப் பொருதொரு<br>பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப் | பத்து தலை தத்த கணை தொடு<br>ஒற்றை கிரி மத்தை பொருது ஒரு<br>பட்ட பகல் வட்ட திகிரியில் - இரவாக |
| பத்தற்கிர தத்தைக் கடவிய<br>பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்<br>**பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே** | பத்தற்கு இரதத்தை கடவிய<br>பச்சை புயல் மெச்ச தகு பொருள்<br>பட்சத்தொடு ரட்சித்து அருள்வதும் - ஒரு நாளே ? |
| தித்தித்தெய ஒத்தப் பரிபுர<br>நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி<br>திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாட | தித்தித்தெய ஒத்த பரிபுர<br>நிர்த்த பதம் வைத்து பயிரவி<br>திக்கு ஒட்க நடிக்க கழுகொடு - கழுது ஆட |
| திக்குப்பரி அட்டப் பயிரவர் | திக்கு பரி அட்ட பயிரவர் |

தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே.

தொக்கு தொகு தொக்கு தொகுதொகு
சித்ர பவுரிக்கு த்ரி கடக - என ஓத

கொத்து பறை கொட்ட களம் மிசை
குக்கு குகு குக்கு குகுகுகு
குத்தி புதை புக்கு பிடி என - முது கூகை

கொட்புற்று எழ நட்பு அற்ற அவுணரை
வெட்டி பலி இட்டு குலகிரி
குத்துப்பட ஒத்து பொர வ(ல்)ல - பெருமாளே.

---

2. பழமுதிர் சோலை -
சிந்துபைரவி / பூர்விகல்யாணி - மிஸ்ரசாபு

தனதன தான தனதன தான
தனதன தான தனதான

அகரமு மாகி யதிபனு மாகி
யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி அவர்மேலாய்

இகரமு மாகி யெவைகளு மாகி
யினிமையு மாகி வருவோனே
**இருநில மீதி லெளியனும் வாழ**
**எனதுமு னோடி வரவேணும்**

மகபதி யாகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை
மகிழ்கதிர் காம முடையோனே

செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர்ச் சோலை

பதம் பிரித்தல்

அகரமும் ஆகி அதிபனும் ஆகி
அதிகமும் ஆகி அகம் ஆகி
அயன் என ஆகி அரி என ஆகி
அரன் என ஆகி அவர் மேலாய்

இகரமும் ஆகி எவைகளும் ஆகி
இனிமையும் ஆகி வருவோனே
இரு நிலம் மீதில் எளியனும் வாழ
எனது முன் ஓடி வரவேணும்

மக பதி ஆகி மருவும் வலாரி
மகிழ் களி கூரும் வடிவோனே
வனம் உறை வேடன் அருளிய பூஜை
மகிழ் கதிர்காமம் உடையோனே

செககண சேகு தகுதிமி தோதி
திமி என ஆடு மயிலோனே
திரு மலிவான பழமுதிர் சோலை

| | |
|---|---|
| மலைமிசை மேவு பெருமாளே. | மலை மிசை மேவும் பெருமாளே. |
| 24. பொது<br>ப்ருந்தாவன சாரங்கா - அங்க தாளம்<br>கல்யாணி / ஆனந்தபைரவி<br><br>தனன தான தானான தனன தான தானான<br>தனன தான தானான தனதான<br><br>அதல சேட னாராட அகில மேரு மீதாட<br>அபின காளி தானாட அவளோடன்<br>றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட<br>அருகு பூத வேதாள மவையாட<br><br>மதுர வாணி தானாட மலரில் வேத னாராட<br>மருவு வானு ளோராட மதியாட<br>வனச மாமி யாராட நெடிய மாம னாராட<br>**மயிலு மாடி நீயாடி வரவேணும்**<br><br>கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு<br>கருதலார்கள் மாசேனை பொடியாகக்<br>கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது<br>கனக வேத கோYடுதி அலைமோதும்<br><br>உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத<br>உவண மூர்தி மாமாயன் மருகோனே<br>உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ<br>னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே. | பதம் பிரித்தல்<br><br><br><br><br><br><br><br>அதல(ம்) சேடனார் ஆட அகில மேரு மீது ஆட<br>அபின காளி தான் ஆட - அவளோடு அன்று<br>அதிர வீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட<br>அருகு பூத வேதாளம் - அவை ஆட<br><br>மதுர வாணி தான் ஆட மலரில் வேதனார் ஆட<br>மருவு வான் உளோர் ஆட - மதி ஆட<br>வனச மாமியார் ஆட நெடிய மாமனார் ஆட<br>மயிலும் ஆடி நீ ஆடி - வரவேணும்<br><br>கதை விடாத தோள் வீமன் எதிர் கொள் வாளியால் நீடு<br>கருதலார்கள் மா சேனை - பொடியாக<br>கதறு காலி போய் மீள விஜயன் ஏறு தேர் மீது<br>கனக வேத கோடு ஊதி - அலை மோதும்<br><br>உததி மீதிலே சாயும் உலக மூடு சீர் பாதம்<br>உவணம் ஊர்தி மா மாயன் - மருகோனே<br>உதய தாம மார்பான ப்ரபுட தேவ மா ராஜன்<br>உளமும் ஆட வாழ் தேவர் - பெருமாளே. |
| 51. திருத்தணிகை<br>நாதநாமக்ரியா / ஷண்முகப்ரியா - ஆதி<br><br>தனதன தனதன தனதன தனதன<br>தனதன தனதன தனதான | பதம் பிரித்தல் |

அரகர சிவனரி அயனிவர் பரவிமு
னறுமுக சரவண பவனேயென்
றநுதின மொழிதர அசுரர்கள் கெடஅயில்
அனலென எழவிடு மதிவீரா

பரிபுர கமலம தடியிணை யடியவர்
உளமதி லுறவருள் முருகேசா
பகவதி வரைமகள் உமைதர வருகுக
பரமன திருசெவி களிகூர

உரைசெயு மொருமொழி பிரணவ முடிவதை
உரைதரு குருபர வுயர்வாய
உலகம னலகில வுயிர்களு மிமையவ
ரவர்களு முறுவர முநிவோரும்

பரவி முனநுதின மனமகிழ் வுறவணி
பணிதிகழ் தணிகையி லுறைவோனே
பகர்தரு குறமகள் தருவமை வநிதையு
மிருபுடை யுறவரு பெருமாளே.

அரகர சிவன் அரி அயன் இவர் பரவி முன்
அறு முக சரவணபவனே என்று
அநுதின(ம்) மொழி தர அசுரர்கள் கெட அயில்
அனல் என எழ விடும் அதி வீரா

பரிபுர கமலம் அது அடி இணை அடியவர்
உளம் அதில் உற அருள் முருகேசா
பகவதி வரை மகள் உமை தர வரு குக
பரமனது இரு செவி களிகூர

உரை செயும் ஒரு மொழி பிரணவ முடிவதை
உரை தரு குருபர உயர்வாய
உலக மன் அலகில உயிர்களும் இமையவர்
அவர்களும் உறுவர முநிவோரும்

பரவி முன் அநுதினம் மனம் மகிழ் உற அணி
பணி திகழ் தணிகையில் உறைவோனே
பகர் தரு குற மகள் தரு அமை வநிதையும்ரி
இருபுடை உற வரு பெருமாளே.

---

82. திருவாவினன்குடி
பௌளி / பூபாளம் - அங்க தாளம்

தனனதன தான தந்த தனனதன தான தந்த
தனனதன தான தந்த தனதான

அவனிதனி லேபிறந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேநடந்து - இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து - பதினாறாய்

சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து - துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற - னடிசேராய்

பதம் பிரித்தல்

அவனி தனிலே பிறந்து மதலை எனவே தவழ்ந்து
அழகு பெறவே நடந்து இளைஞோனாய்
அரு மழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று
அதி விதமதாய் வளர்ந்து பதினாறாய்

சிவ கலைகள் ஆகமங்கள் மிகவு மறை ஓதும் அன்பர்
திருவடிகளே நினைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகு கவலையாய் உழன்று
திரியும் அடியேனை உன்றன் அடி சேராய்

மவுனவுப தேச சம்பு மதிய றுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த - மகதேவர்
மனமகிழ வேய ணைந்து ஒருபுறம தாக வந்த
மலைமகள்கு மார துங்க - வடிவேலா

பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த - கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த - பெருமாளே.

மவுன உபதேச சம்பு மதி அறுகு வேணி தும்பை
மணி முடியின் மீது அணிந்த மக தேவர்
மன மகிழவே அணைந்து ஒரு புறமதாக வந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா

பவனி வரவே உகந்து மயிலின் மிசையே திகழந்ீfது
படி அதிரவே நடந்த கழல் வீரா
பரம பதமே செறிந்த முருகன் எனவே உகந்து
பழநி மலை மேல் அமர்ந்த பெருமாளே.

98. திருவிடைமருதூர்

தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனா தான தானனா
தனதனன தனதனன தனதனன தனதனன
தான தானனா தான தானனா தனதன தனதானா

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமொளென வுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய் அவரொரு - பெரியோராய்

அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய் அவியுறு - சுடர்போலே

வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறு ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு

பதம் பிரித்தல்

அறுகு நுனி பனி அனைய சிறிய துளி பெரியது ஒரு
ஆகம் ஆகி ஓர் பால ரூபமாய்
அரு மதலை குதலை மொழி தனில் உருகி அவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினில் அருமை இட மொளு மொளு என உடல் வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய் அவர் ஒரு பெரியோராய்

அழகு பெறு நடை அடைய கிறிது படு மொழி பழகி
ஆவியாய ஓர் தேவிமாருமாய்
விழு சுவரை அரிவையர்கள் படு குழியை நிலைமை என
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணு அளவு தவிடும் இக பிதிரவிட மனம் இறுகி
ஆசை ஆளராய் ஊசி வாசியாய் அவி உறும் சுடர் போலே

வெறு மிடியன் ஒரு தவசி அமுது படை எனும் அளவில்
மேலை வீடு கேள் கீழை வீடு கேள்
திடு திடு என நுழைவதன் முன் எதிர் முடுகி அவர்களொடு
சீறி ஞாளிகள் போல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வரு பொருள்கள் சுவறி இட மொழியும் ஒரு

வீணி யார்சொலே மேல தாயிடா விதிதனை - நினையாதே

மினிகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோஎனா
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலா யாளி வாயராய் மிடையுற - வருநாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்
பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா
வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய் மனையவள் - மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனா வாலர் சீயெனா
கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனா வீடு போவெனா
வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள் மனிதர்கள் - பலபேச

இறுதியதொ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா
எனதுடமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமொ லேலெனா வாயை ஆவெனா
இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறையய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் எரிதனி - லிடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே
இருவினைமு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் - பெருமாளே.

100. காஞ்சீபுரம்

வீணியர் சொலே மேலது ஆயிடா விதி தனை நினையாதே

மினுகு மினுகு எனும் உடலம் அற முறுகி நெகிழ்வு உறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமை உளது எனும் அவரை விடும் விழலை அதனில்
வருவார்கள் போகுவார் காணுமோ எனா
விடு துறவு பெரியவரை மறையவரை வெடு வெடு என
மேளமே சொலாய் ஆளி வாயராய் மிடை உற வரு நாளில்

வறுமைகளும் முடுகி வர உறு பொருளு நழுவ சில
வாதம் ஊது காமாலை சோகை நோய்
பெரு வயிறு வயிறு வலி படுவன் வர இரு விழிகள்
பீளை சாறு இடா ஈளை மேலிடா
வழ வழ என உமிழ் அமுது கொழ கொழ என ஒழிகி விழ
வாடி ஊன் எலாம் நாடி பேதமாய் மனையவள் மனம் வேறாய்

மறுக மனை உறும் அவர்கள் நணுகு நணுகு எனும் அளவில்
மாதர் சீ எனா வாலர் சீ எனா
கனவு தனில் இரதமொடு குதிரை வர நெடிய சுடு
காடு வா எனா வீடு போ எனா
வலது அழிய விரகு அழிய உரை குழறி விழி சொருகி
வாயு மேலிடா ஆவி போகு நாள் மனிதர்கள் பல பேச

இறுதி அதொடு அறுதி என உறவின் முறை கதறி அழ
ஏழை மாதராள் மோதி மேல் விழா
எனது உடைமை எனது அடிமை எனு அறிவு சிறிதும் அற
ஈ மொலேல் எனா வாயை ஆ எனா
இடுகு பறை சிறு பறைகள் திமிலையொடு தவில் அறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய் எரிதனில் இடும் வாழ்வே

இணை அடிகள் பரவும் உனது அடியவர்கள் பெறுவதுவும்
ஏசிடார்களோ பாச நாசனே
இரு வினை மு(ம்)மலமும் அற இறவி ஒடு பிறவி அற
ஏக போகமாய் நீயு நானுமாய்
இறுகும் வகை பரம சுக மதனை அருள் இடை மருதில்
ஏக நாயகா லோக நாயகா இமையவர் பெருமாளே.

பதம் பிரித்தல்

பாகேஶ்ரீ - சங்கீர்ணசாபு

தத்தத் தனதான தத்தத் தனதான

அற்றைக் கிரைதேடி அத்தத் திலுமாசை
பற்றித் தவியாதே பற்றைப் பெறுவேனோ
வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொளைசீலா
கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே

அற்றைக்கு இரை தேடி அத்தத்திலும் ஆசை
பற்றித் தவியாத பற்றை பெறுவேனோ
வெற்றி கதிர் வேலா வெற்பை தொளை சீலா
கற்று உற்று உணர் போதா கச்சி பெருமாளே

---

196. திருப்பாண்டிக்கொடுமுடி
மாண்டு - மிஸ்ரசாபு
சஹானா

தனதனத் தனனத் தனதான

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் புகுதாதே

திருவருட் கருணைப் ப்ரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ

அரியயற் கறிதற் கரியோனே
அடியவர்க் கெளியற் புதநேயா

குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமாளே.

பதம் பிரித்தல்

இரு வினை பிறவி கடல் மூழ்கி
இடர்கள் பட்டு அலைய புகுதாதே

திரு அருள் கருணை ப்ரபையாலே
திரம் என கதியை பெறுவேனோ

அரி அயற்கு அறிதற்கு அரியோனே
அடியவர்க்கு எளியற்கு அற்புத நேயா

குரு என சிவனுக்கு அருள் போதா
கொடுமுடி குமர பெருமாளே.

---

253. திருப்பரங்குன்றம்
சாவேரி - ஆதி

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன தனதானா

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை

பதம் பிரித்தல்

உனை தினம் தொழுதிலன் உனது இயல்பினை

| | |
|---|---|
| உரைத்தி லன்பல மலர்கொடுன் அடியிணை<br>உறப்ப ணிந்திலன் ஒருதவ மிலனுன - தருள்மாறா | உரைத்திலன் பல மலர் கொடு உன் அடி இணை<br>உற பணிந்திலன் ஒரு தவம் இலன் உனது அருள் மாறா |
| உளத்து ளன்பினர் உறைவிடம் அறிகிலன்<br>விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்<br>உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன் - மலைபோலே | உ(ள்)ளத்து உள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்<br>விருப்பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்<br>உவப்பொடு உன் புகழ் துதி செய விழைகிலன் மலைபோலே |
| கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு<br>கறுத்த வெஞ்சின மறலிதன் உழையினர்<br>கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு - பொருபோதே | கனைத்து எழும் பகடு அது பிடர் மிசை வரும்<br>கறுத்த வெம் சின மறலி தன் உழையினர்<br>கதித்து அடர்ந்து எறி கயிறு அடு கதை கொடு பொரு போதே |
| கலக்கு றுஞ்செயல் ஒழிவற அழிவுறு<br>கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்<br>**கணத்தில் என்பய மறமயில் முதுகினில் - வருவாயே** | கலக்குறும் செயல் ஒழிவு அற அழிவு உறு<br>கருத்து நைந்து அலம் உறும் பொழுது அளவை கொள்<br>கணத்தில் என் பயம் அற மயில் முதுகினில் வருவாயே |
| வினைத்த லந்தனில் அலகைகள் குதிகொள<br>விழுக்கு டைந்துமெய் உகுதசை கழுகுண<br>விரித்த குஞ்சியர் எனுமவு ணரைஅமர் - புரிவேலா | வினைத் தலம் தனில் அலகைகள் குதி கொள<br>விழுக்கு உடைந்து மெய் உகு தசை கழுகு உ(ண்)ண<br>விரித்த குஞ்சியர் எனும் அவுணரை அமர் புரி வேலா |
| மிகுத்த பண்பயில் குயில்மொழி அழகிய<br>கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை<br>விரைத்த சந்தன ம்ருகமத புயவரை - உடையோனே | மிகுத்த பண் பயில் குயில் மொழி அழகிய<br>கொடிச்சி குங்கும முலை முகடு உழு நறை<br>விரைத்த சந்தன ம்ருகமத புய வரை உடையோனே |
| தினத்தி னஞ்சதுர் மறைமுநி முறைகொடு<br>புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு<br>சினத்தை நிந்தனை செயுமுநி வரர்தொழ - மகிழ்வோனே | தினம் தினம் சதுர் மறை முநி முறை கொடு<br>புனல் சொரிந்து அலர் பொதிய வி(ண்)ணவரொடு<br>சினத்தை நிந்தனை செயு(ம்) முநிவரர் தொழ மகிழ்வோனே |
| தெனத்தெ னந்தன எனவரி யளிநறை<br>தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்<br>**திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண - பெருமாளே.** | தெனத் தெனந்தன என வரி அளி நறை<br>தெவிட்ட அன்பொடு பருகு உயர் பொழில் திகழ்<br>திருப்பரங்கிரி தனில் உறை சரவண பெருமாளே. |